உ

சிவமயம்

தெற்குவட்டகை நகரத்தார் தீர்மானங்கள்

ஈசுவரஞூ சித்திரைமீ 2, 3, 4உ

தெற்கு வட்டகை நகரத்தார் சங்கம்

காரியாலயம் : பாகனேரி.

APRIL 1937.

உ

சிவமயம்

சித்திவிநாயகர் துணை

ஈசுவர௵ சித்திரைமீ 2உ, 3உ, 4உ

சோழபுரத்தில் தெற்கு வட்டகை

---

1. நாட்டரசன் கோட்டை.
2. பாகனேரி.
3. அலவாக் கோட்டை.
4. சோக்கலிங்கபுரம்.
5. ஒக்கூர்.
6. கீழப்பூங்குடி.
7. காளையார் மங்கலம்.
8. சோழபுரம்.
9. சக்கந்தி.
10. அழகாபுரி.
11. வெற்றியூர்.
12. அரண்மனை சிறுவயல்.
13. நடராஜபுரம்.
14. பனங்குடி.
15. சோக்கநாதபுரம்.
16. கருங்குளம்.
17. பட்டமங்கலம்.

நகரத்தார்கள்

கூடிப்பேசி நிறைவேற்றிய தீர்மான விவரம்.

தெற்குவட்டகை நகரத்தார் சங்கம்

காரியாலயம்: பாகனேரி.

ஏப்ரல் 1937.

THE JUPITER PRESS
16, SEMBUDOSS STREET
— MADRAS —

30/5

உ

மரகதவிநாயகர் துதி

வெண்பா

மாவாழு மேழு வழிநகரத் தார்க்கென்றுங்
கோவாழுஞ் செல்வக் குலதெய்வ—மாவாழ்
மரகதவி நாயகனே மாமலர்தூய் வாழ்த்த
வரநலவாழ் வெல்லாம் வரும்.

திருமகள் துதி

காடுவெட்டிப் போட்டுக் கடியநிலங் திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேல்வணிகர்—வீடுகட்கு
அன்றைக்கு வந்தஎங்கள் அம்மாள் இலக்குமிநீ
என்றைக்கும் நீங்கா திரு.*

---

* பாடுவான் முத்தப்ப செட்டியார் அவர்கள் இயற்றியது.

உ

சிவமயம்

சித்திவிநாயகர் துணை.

ஈசுவரஸு சித்திரைமீ 2உ 3உ 4உ

தெற்கு வட்டகை நகரத்தார்கள் பேசிக்கொண்ட விவரம்

(முதலாவது.) கலியாணத்திற்கு முகூர்த்தம் வைத்தல் :—திருமாங்கல்யத்திற்குப் பொன் கொடுத்து, முகூர்த்தம் வைக்க மஞ்சள் வீசை 1ம், விபூதி, குங்குமம், சந்தனம், புஷ்பம், இவற்றுடன் எலுமிச்சம்பழம் 16ம், தேங்காய் 21ம், மலைப்பழம் 101ம், வெற்றிலைக்கட்டு 2ம், பாக்கு பட்டணம்படி 2ம் கொண்டு வருகிறது. கொண்டு வருகிற சம்பந்தப்புறத்திற்கு மாத்திரம் தேங்காய் 6ம், மலைப்பழம் 31ம், பாக்கு பட்டணம்படி 4ம், வெற்றிலைக்கட்டு 1ம் கொடுக்கிறது. ஆள் கொண்டு வந்தால், மேல் கண்டபடி சம்பந்தப்புறத்திற்குக் கொடுத்து அனுப்புவதுடன் மேற்படி ஆளுக்குக் கொட்டானில் ஒரு படி பாக்கும், ரூபாய் இரண்டுக்குள் (ரூ. 2) வேட்டியாவது, ரொக்கமாவது கொடுக்கிறது. கொடுத்துவிடுகிற இடத்திலாவது வாங்கிப் பொன் கொடுக்கிற இடத்திலாவது பாக்கு வகையரா எவ்வித சாமான்களும் யாருக்கும் கொடுக்கிறதில்லை. சம்பந்தப்புறத்தாருக்காவது, மற்ற சுற்றத்தாருக்காவது பலகாரம் கொடுத்தனுப்புகிறதில்லை. வருகிறவர்களுக்குச் சாப்பாடு, பலகாரம் செய்துவைக்கிறது.

2. கலியாணம் :—மாப்பிள்ளை வீடு வருகிற நாளிலிருந்து நான்கு நாட்களில் கலியாணம் நடத்துகிறது. அதில் மாப்பிள்ளை வீட்டார் இரண்டுவேளை சாப்பாடும், பெண்

விட்டார் மூன்றுவேளை சாப்பாடும், ஒருவேளை அவரவர்கள் சாப்பாடுமாகச் செய்கிறது. பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கு வைக்கவேண்டிய உண்பன, தின்பன, சரக்குச் சாமான் ஐந்து (5) கலத்தோதுக்குள் வைக்கிறது; அல்லது அதற்காக ரூ. 301க்கு மேல் ரூ. 501க்குள் கொடுக்கிறது. மாமியார் சாமான் வைக்கிறதுமில்லை; அதற்காக ரூபாய் கொடுக்கிறதுமில்லை. பஞ்சின்மேல் வைக்கிறதற்காகவும், பழைய சேலைக்காகவும் சேலையாவது, அதற்காக ரூபாயாவது கொடுக்கிறதில்லை. கலியாணத்திற்கு மாமக்காரர் மொய்ப் பணம் (ரூ $37\frac{5}{8}$)க்குள்ளும், சடங்குகாரர் மொய்ப்பணம் (ரூ $6\frac{3}{8}$)க்குள்ளும் மற்ற சுற்றத்தார், பங்காளிகள் மொய்ப் பணம் ரூ 1ம் எழுதுகிறது. பணம் எழுதுகிற மாமக்காரருக் கும், சடங்குகாரருக்கும் கொட்டானில் பாக்கு பட்டணம் படி 4ம், ரொக்கம் ரூ 2ம், மூன்று வகைப் பழங்களுக்குள்ளும் கொடுக்கிறது. மற்ற சுற்றத்தார், பங்காளிகளுக்குக் கொட்டானில் பாக்கு படி 1ம், வாழைப்பழம் 4ம், மற்ற இரண்டுவகைப் பழங்களில் வகைக்கு 1ம் கொடுக்கிறது. மற்றப்படி களத்துப்பாக்கு, முறைப்பாக்கு முதலிய சகல முறைகளுக்கும், மாமக்காரர் முதல் சகல சுற்றத்தாருக்கும் பாக்கு கொடுக்கிறதில்லை. சம்பந்தப்புறத்தாருக்கு மாத் திரம் களத்துப்பாக்கு முதல் ஒவ்வொரு முறைகளுக்கும் கொட்டானில் பாக்கு பட்டணம் படி ஒன்று கொடுக்கிறது. மாம வேவு எடுத்துகிறதற்கு அரிசி சாமான்களுக்காக ரூபாய் எழுபத்தி ஒன்றுக்குள்ளும் (ரூ 71), வேட்டி, சேலைக்காக ரூபாய் முப்பத்தி ஒன்றுக்குள்ளும் (ரூ. 31) கொடுக்கிறது. அதற்காக மாமக்காரருக்கு மட்டிலும் பாக்குக்காக ரூபாய் பதினொன்றுக்குள் (ரூ. 11) கொடுக் கிறது. கலியாண வேவு எடுத்துகிறது. அரிசி கோட்டை

11 (பட்டணம் படி 440)க்குள்ளும் அதற்குரிய சாமான்களும் சேர்த்து எடுத்துகிறது. மேற்படி வேவுக்காக வெள்ளிச்சாமான், வெண்கலச்சாமான் முதலிய எந்தச் சாமானும் வேவில் வைத்தோ, சாமான்களுக்கு ஆதாரமாகவோ கொடுக்கிறதில்லை. மேற்படி வேவு அரிசிக்கு மாப்பிள்ளை வீட்டார் அரிசி கோட்டை ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் வேவு பாக்குக்காகப் பெண் வீட்டாருக்குக் கொடுக்கிறது. உரிச்செம்பில் போடுகிறது. மைத்துனப் பணம், பாக்குச்சுருள், முறை ஒன்றுக்கு ரூபாய் பதினாறு (ரூ. 16) வீதம் கொடுக்கிறது. மாப்பிள்ளை வீட்டுச் சடங்குகாரருக்குப் பெண்வீட்டார் கலியாண வீட்டிலும், நீர்ச்சோறிட்ட வீட்டிலும் பணம்பட்டை, சேலை, அரிசி, வட்டு முதலிய சாமான்களாவது அதற்காகப் பணமாவது கொடுக்கிறதில்லை. குடியழைப்பிலும், பெண்ணழைப்பிலும் பெண் சொல்லிக் கொள்ளும்போது பெண்ணுக்குத் தாயார், தகப்பனார் மாத்திரம் ரூபாய் கொடுக்கிறது. மற்றவர்கள் கொடுக்கிறதில்லை.

3. பெண் அழைப்பு:—பெண் அழைப்புக்கு, சம்பந்தப்புறத்தார் வீடுகண்டுண்பதற்கும் பாலுக்கிட்ட நெல்லுக்கும் ரூ 16க்குள் கொடுக்கிறது. கூடுகிறவர்கள் ரூபாய் அரை (ரூ. $\frac{1}{2}$) வீதம் கொடுக்கிறது. சம்பந்தப் புறத்தாருக்குப் பாக்கு படி 2ம், ரொக்கம் ரூ. 4ம், மூன்று வகைப் பழங்களுக்குள்ளும் ஒரு கொட்டானில் கொடுக்கிறது. கூடுகிறவர்களுக்குப் பாக்கு பட்டணம் படி ஒன்றும், வாழைப்பழம் 4ம், மற்ற இரண்டுவகைப் பழங்களில் வகைக்கு 1ம் ஒரு கொட்டானில் வைத்துக் கொடுக்கிறது. பெண்ணழைப்புச் சாப்பாடு இரண்டுவேளை நடத்துகிறது.

4. பிள்ளையார் நோன்பு வேவு :—முதல்வருடத்திற்கு மட்டும் பச்சரிசி படி 16க் குள்ளும், அவல் படி 16க் குள்ளும், அதற்குள்ள சாமான்களும், ரொக்கம் ரூ. 16க் குள்ளும் கொடுக்கிறது. மேற்படி வேவுக்குப் பெண்ணின் தகப்பனர், சகோதரர்கள் மாத்திரம் அன்று தினமும், மறுநாள் மத்தியானமும் சாப்பாடு வைத்துக்கொள்கிறது. சம்பந்தப்புறத்திற்கு மட்டிலும் கொட்டானில் பாக்கு படி 2 கொடுக்கிறது. வேறு எந்தச் சாமானும் திருப்பிக் கொடுக்கிறதில்லை.

5. போங்கல் வேவு :—முதல்வருட வேவுக்கு மட்டிலும் பச்சரிசியும், புழுங்கலரிசியும் சேர்த்து அரிசி பட்டணம் படி 101க் குள்ளும், அதற்குரிய சாமான்களும் வைத்து எடுத்தி அத்துடன் ரொக்கம் ரூ. 101க் குள்ளும் கொடுக்கிறது. வேவு எடுத்தி வருகிறவர்கள் வேவு எடுத்தின மறுநாள் பகல் சாப்பாட்டின்பேரில் வீடுகளுக்கு வருகிறது. மேற்படி வேவுக்கு சம்பந்தப்புறத்திற்குக் கொட்டானில் பாக்கு பட்டணம் படி 2ம், ரூபாய் ஏழு (ரூ. 7) க் குள்ளும் கொடுக்கிறது. வேவு எடுத்திவருகிற சுற்றத்தார்களுக்கு மாத்திரம் ஒரு கொட்டானில் ஒரு படி பாக்கும், வாழைப்பழம் 2ம் கொடுக்கிறது. சம்பந்தப் புறத்தாருக்கு எந்தச் சாமானும் திருப்பிக் கொடுத்து விடுகிறதில்லை. மேலே "அதற்குரிய சாமான்கள்" என்று எழுதி யிருப்பதற்கு, சாமான்கள் வாங்கிக் கொடுக்கிறது ; அதற்காக விலை போட்டு ரூபாய் கொடுக்கிறதில்லை.

6. குழந்தை பிறந்த வருட போங்கல் வேவு, வேறு வைத்த வருட போங்கல் வேவு :—மேற்படி வேவுகளுக்குப் பச்சரிசி, புழுங்கலரிசியும் சேர்த்து அரிசி பட்டணம்

படி 51க்குள்ளும், அதை யனுசரித்து அதற்குரிய சாமான்களும் வைத்து எடுத்தி, அத்துடன் ரொக்கம் ரூபாய் ஐம்பத்தி ஒன்றுக்குள்ளும் (ரூ. 51) கொடுக்கிறது.

"அதற்குரிய சாமான்கள்" என்று எழுதியிருப்பதற்குச் சாமான்களே வாங்கிக்கொடுக்கிறது; அதற்காக ரூபாய் கொடுக்கிறதில்லை. வேவு எடுத்தின மறுநாள் பகல் சாப்பாட்டிற்குமேல் வீடுகளுக்கு வருகிறது. தாய் வீட்டாருக்கு மட்டிலும் கொட்டானில் பாக்கு படி ஒன்றும், ரூபாய் ஐந்துக் குள்ளும் (ரூ. 5) கொடுக்கிறது.

7. வேறு வைத்தல்:—வேறுவைத்த வீட்டில் பெண்ணுக்கு வேவு அரிசி சாமானுக்காகவும், புடவை, பாத்திரம் வகையராவுக்காகவும், மற்ற சாமான்களுக்காகவும் பட்டைக்குக் கொடுப்பதும் சேர்த்து ரூ. 151-க்குள் பெண்ணின் தாய்வீட்டார் கொடுக்கிறது. வேறு வைத்த மறுநாள் பகல் சாப்பாட்டின்பேரில் வீடுகளுக்கு வருகிறது. சுற்றத்தார்கள் திருப்பி வாங்காது ரூ. 1 பட்டைக்குக் கொடுக்கிறது. அதற்காகக் கொட்டானில் பாக்கு பட்டணம் படி 1-ம், வாழைப்பழம் 4-ம், மற்ற இரண்டுவகைப் பழங்களில் வகைக்கு 1ம் கொடுக்கிறது. வேறு வைக்கிறதற்கு மகன் வீட்டுக்கு அரிசி பட்டணம் படி 101க் குள்ளும், சரக்கு சாமான் விலைக்காகவும் மற்ற சாமான்களுக்கும், பட்டைக்குக் கொடுப்பதும் சேர்த்து ரூ. 101க்குள்ளும் கொடுக்கிறது.

8. வீடு குடி புகுதல்:—மாமக்காரர் வேவு அரிசி சாமானுக்காகவும், புடவை வகையரா சாமானுக்காகவும், பட்டைக்குக் கொடுப்பதற்கும் சேர்த்து ரூபாய் நூற்று ஒன்று (ரூ. 101)க்குள் கொடுக்கிறது. சுற்றத்தார்கள்

ரூ. 1 பட்டைக்குக் கொடுக்கிறது. அதற்காகக் கொட்டானில் பாக்கு பட்டணம் படி ஒன்றும், வாழைப்பழம் 4ம், மற்ற இரண்டுவகைப் பழங்களில் வகைக்கு 1-ம் கொடுக்கிறது. குடிபுகுந்த மறுநாள் பகல் சாப்பாட்டுக்குமேல் வீடுகளுக்குப் போய் வருகிறது.

9. தீர்த்தம் சாப்பிடுதல்:—தீர்த்தம் குடிப்பதற்குத் தாய் வீட்டார் கொண்டுவரும் சாமான் வகையராவுக்காகவும், பட்டைக்குக் கொடுப்பதற்கும் சேர்த்து சாமான்களாகவாவது ரொக்கமாகவாவது ரூபாய் இருநூற்றி ஒன்று (201)க்குள் கொடுக்கிறது. சுற்றத்தார்கள் ரூ. 1 பட்டைக்குக் கொடுக்கிறது. அதற்காகக் கொட்டானில் பாக்கு பட்டணம் படி 1ம், வாழைப்பழம் 4ம், மற்ற இரண்டுவகைப் பழங்களில் வகைக்கு 1ம் கொடுக்கிறது. தீர்த்தம் சாப்பிட்ட மறுநாள் பகல் சாப்பாட்டுக்குமேல் வீடுகளுக்குப் போய் வருகிறது.

10. பிள்ளைப் பேறு :—பெண்ணுக்குத் தாய் வீட்டுக்காரர் பிள்ளை பிறந்த வீட்டில் முதற் பிள்ளைக்கு நகைக்குத் தங்கப் பவுன் பதினாறுக்குள்ளும் (16), மறு பிள்ளைக்கு ஒவ்வொன்றுக்கும் தங்கப் பவுன் ஆறு (6)க்குள்ளும் கொடுக்கிறது.

11. காப்புக்கட்டுப் புதுமை, ஸ்வீகாரப் புதுமை :— (அ) முதற்பிள்ளையின் காப்புக்கட்டுப் புதுமை, ஸ்வீகாரப் புதுமை, காப்புக்கட்டுப் புதுமை செய்யாது பள்ளிக்கூடத்தில் வைக்கிற புதுமை இவை மூன்றுக்கும் மாமக்காரர் மாமவேவுக்காக அரிசி பட்டணம் படி 101-க்குள்ளும், அதற்குரிய சாமான்களுக்காகவும் மற்றும் கொண்டு வரும் சாமான்களுக்காகவும், மொட்டையிட்ட நெல்லுக்காகவும் ரூபாய் இருநூற்றி ஒன்று (ரூ. 201)க்குள் கொடுக்கிறது.

வேட்டி, புடவை வகைரா ரூபாய் எழுபத்தி ஒன்றுக்குள்ளும் (ரூ. 71) வாங்கிக்கொடுக்கிறது; அல்லது ரொக்கமாகக் கொடுக்கிறது. மொய்ப்பணம் ரூ. 37 $\frac{5}{8}$க்குள்ளும், நகைக்கு ரூ. 101க்குள்ளும் எழுதுகிறது. சடங்குகாரர் மொய்ப்பணம் ரூ. 6$\frac{3}{8}$க்குள்ளும், நகைக்கு ரூ. 7-க்குள்ளும் எழுதுகிறது. சுற்றத்தார், பங்காளிகள் மொய்ப் பணம் ரூ. 1. எழுதுகிறது. சுற்றத்தார், பங்காளிகள் நகைக்கு எழுதுகிறதில்லை.

(ஆ) இரண்டாவது பிள்ளை புதுமைக்கு மாமக்காரர் வேவு அரிசி வகையரா சாமான்களுக்காகவும் மொட்டையிட்ட நெல்லுக்காகவும் ரூ. 51-க்குள் கொடுக்கிறது. வேஷ்டி, புடவை வகையரா ரூ. 51-க்குள்ளும் வாங்கிக் கொடுக்கிறது; அல்லது ரொக்கமாகக் கொடுக்கிறது. வேறு சாமான்களாவது ரொக்கமாவது கொடுக்கிறதில்லை. மாமக்காரர் மொய்ப்பணம் ரூ. 25$\frac{1}{8}$க்குள்ளும் நகைக்கு ரூ. 51க்குள்ளும் எழுதுகிறது. சடங்குகாரர் மொய்ப்பணம் ரூ. 6$\frac{3}{8}$க்குள்ளும் நகைக்கு ரூ. 7க்குள்ளும் எழுதுகிறது. சுற்றத்தார், பங்காளிகள் மொய்ப்பணம் ரூ. 1 எழுதுகிறது. சுற்றத்தார், பங்காளிகள் நகைக்கு எழுதுகிறதில்லை.

(இ) மேற்குறிப்பிட்ட எல்லாப் புதுமைகளுக்கும் சுற்றத்தார் யாவரும் புதுமையிலிருந்து மூன்றாவது நாள் மத்தியானம் வரை கூடியிருக்கிறது. மாமக்காரருக்கும் சடங்குகாரருக்கும் பெட்டியில் பாக்கு பட்டணம்படி 2ம், சீனிபடி 2ம், மூன்று வகைப் பழங்களும் கொடுக்கிறது. மற்ற சுற்றத்தாருக்குப் பெட்டியில் பாக்கு பட்டணம்படி 1ம், சீனிபடி $\frac{1}{2}$ யும், வாழைப்பழம் 4ம், மற்ற இரண்டுவகைப் பழங்களில்

வகைக்கு 1ம் கொடுக்கிறது. ஊருக்கு சீனிபடி நாழியும், ஒரு தொன்னையில் காப்பரிசியும் கொடுக்கிறது.

12. கிலுக்கு எடுத்தல்:—மகார் நோன்புக்குப் பிள்ளைகள் கிலுக்கு எடுத்து வருகிறதற்கு மாமக்காரர் ரூ. 31க்குள்ளும், கூடவருகிற பிள்ளைகளுக்குக் கொட்டானில் பாக்கு படி $\frac{1}{2}$ யும், வாழைப்பழம் 2ம் கொடுக்கிறது. மற்ற பங்குக்கள் கிலுக்கு எடுக்கிறபிள்ளைக்கு ரூ. 11க்குள் கொடுக்கிறது. மாமக்காரர் உபாத்தியாயருக்கு ரூ. 5க்குள்ளும், மற்றவர்கள் உபாத்தியாருக்கு ரூ. 1ம் கொடுக்கிறது.

13. உபதேசம், கார்த்திகைப் புதுமை, திருவாதிரைப் புதுமை முதலிய விசேடங்களில் சுற்றத்தார்கள் பங்காளிகளெல்லோரும் அன்று தினமும் மறுநாள் மத்தியானம் வரையும் கூடியிருக்கிறது. மாமக்காரர் மொய்ப்பணம் ரூ. $12\frac{5}{8}$க்குள்ளும், மற்ற சுற்றத்தார்கள், பங்காளிகள் ரூ. 1-ம் எழுதுகிறது. கார்த்திகைப் புதுமைக்கு மாமக்காரர் மட்டும் பொரிக்காக ரூ. 11க்குள் எழுதுகிறது. மாமக்காரருக்குப் பெட்டியில் பாக்கு பட்டணம் படி 2ம், மூன்று வகைப் பழங்களும் மற்ற சுற்றத்தாருக்குப் பெட்டியில் பாக்கு பட்டணம் படி 1ம், வாழைப்பழம் 4ம், மற்ற இரண்டு வகைப் பழங்களில் வகைக்கு 1ம் கொடுக்கிறது. திருவாதிரை கும்பிட வருகிறவர்களுக்குத் தோசை வகையரா சாப்பிடச் செய்கிறது. அவர்களுக்கு எவ்வித சாமான்களாவது ரொக்கமாவது கொடுக்கிறதில்லை.

14. இருது சடங்கு:—தாய் வீட்டில் பெண் ருதுவானால், சம்மந்தப்புறத்தார் காய்கறிக்கும் பட்டைக்கும் ரூ. 21க்குள் கொடுக்கிறது. அதற்காகச் சம்பந்தப்புறத்திற்கு ரூ. 6-க்குள்ளும் கொட்டானில் பாக்குப் படி இரண்டும்,

கொடுக்கிறது. மாப்பிள்ளை வீட்டில் பெண் ருதுவானல் பெண் வீட்டார் சம்பந்தப் புறத்தார்க்கு (ரூ. 71) ரூபாய் எழுபத்தி ஒன்றுக்குள் கொடுக்கிறது. சம்பந்தப்புறத் தாருக்குக் கொட்டானில் பாக்கு படி 2-ம், ரூ. 6க்குள்ளும் கொடுக்கிறது. ஷை விசேடத்திற்கு நெருங்கிய உறவினர் மட்டும் கூடிக்கொள்ளுகிறது. உறவினர்கள் திருப்பி வாங் காது ரூ. 1 பட்டைக்குக் கொடுக்கிறது. அதற்காகக் கொட் டானில் பாக்கு பட்டணம் படி 1ம், வெற்றிலையும், வாழைப் பழம் 2-ம் கொடுக்கிறது. ஷை விசேட தினத்திற்கு மறுநாள் பகல் சாப்பாட்டுக்குமேல் வீடுகளுக்குப்போய் வருகிறது.

15. இருதுவானதற்கும் குழந்தை பிறந்ததற்கும் வீட்டில் வந்து பேறு கேட்கிறவர்களுக்குமட்டும் தொன்னையில் சீனி அல்லது கற்கண்டு மாத்திரம் $\frac{1}{8}$ படி கொடுக்கிறது. அதற் காகப் பணம் கொடுக்கிறதில்லை. அயலூர்களுக்குச் சீனி அல்லது கற்கண்டாவது, அதற்காகப் பணமாவது கொடுத்து அனுப்புகிறதில்லை. கலியாணம், கார்த்திகைப்புதுமை, பெண் ணழைப்பு ஆகிய விசேடங்களில் கும்பிட்டுக் கட்டிக்கொள் கிற உள்ளூராருக்குப் புள்ளி 1க்கு அரைப்படி பாக்கு மட்டும் கொடுக்கிறது. வராதவர்களுக்கு அன்று தினம் மட்டும் நம்முடைய இனத்தார் வந்து கேட்டால் கொடுக்கிறது.

16. வீடு குடிபுகுதல், அறுபதாவது ஆண்டு சாந்திக் கலியாணம், சதாபிஷேசம், இவற்றிற்கு நகரத்தார் களுக்குச் சாப்பாடு செய்து வைக்கிறது. அவர்களுக்கு ஷை விசேடங்களில் கொட்டானில் அரைப்படி பாக்கும், வாழைப் பழம் 4ம், மற்ற இரண்டு வகைப் பழங்களில் வகைக்கு 1ம் கொடுக்கிறது. சட்டி வகையராவும், வேறு எவ்வித சாமான் களும் கொடுக்கிறதில்லை.

17. சடங்குகாரர்களுக்குப் பணம் பட்டை கொடுத்தல்:—எல்லா சுப விசேடங்களுக்கும் சடங்குகாரர்களுக்கு ரூ. 3$\frac{1}{8}$க்குள் வைத்துச் சொல்லுகிறது. எல்லாச் சடங்குகாரர்களுக்கும் கலியாண வீட்டிலும், காப்புக்கட்டுப் புதுமையிலும் பணம் பட்டை ரூ 4|$\frac{1}{8}$க்குள்ளும், வேட்டி, சேலைக்கு ரூ. 31க்குள்ளும், பெண்ணெடுக்கிக் காட்டுகிறவர்களுக்குப் பணம் பட்டை ரூ. 31$\frac{1}{8}$க்குள்ளும், வேட்டி சேலைக்கு ரூ. 31 க்குள்ளும், மற்ற எந்த சுப விசேடங்களுக்கும் பணம் பட்டை ரூ 2|$\frac{1}{8}$ க்குள்ளும் வேட்டி சேலைக்கு ரூ. 3|க்குள்ளும் கொடுக்கிறது.

18. எந்த விசேடத்திற்கும் மேலே கண்ட பாக்கு பழம் சொட்டான் இவைகளைத் தவிர சட்டியாவது, சாமான்களாவது பணமாவது கொடுக்கிறதில்லை.

19. விசேடங்களில் சாப்பிட வாராதவர்களுக்குச் சாப்பாடு பலகாரம் கொடுத்தனுப்புகிறதில்லை. அவர்கள் பாத்திரம் அனுப்பினால் சாப்பாடு, பலகாரம் அனுப்புகிறது.

20. எல்லா விசேடங்களிலும் ஆண், பெண் இருபாலர்களும் பந்தியில் பலகாரம் சாப்பிடுகிறது. எண்ணிக் கொடுப்பது மில்லை; அதற்காகப் பணம் கொடுப்பது மில்லை. அயலூருக்குப் பலகாரம் காய்கறி கொடுத்தனுப்புகிறதில்லை.

21. எல்லா விசேடங்களிலும் முதல்நாள் மட்டும் சாப்பாடு, பலகாரத்திற்குச் சுற்றத்தார், பங்காளிகளை அழைக்கிறது. அப்பால் அவரவர்களும் வந்து சாப்பாடு பலகாரம் சாப்பிட்டுப் போய்வருகிறது.

22. திருப்பூட்டுகிறவர்களுக்குப் பாக்கு பட்டணம்படி 4ம், சீனி பட்டணம் படி 1ம், தேங்காய் 6ம், வெற்றிலைக்கட்டு

1ம், வாழைப்பழம் 31ம், மற்ற இரண்டு வகைப்பழங்களில் வகைக்குப் பழம் 11ம், ஒரு கடகத்தில் வைத்துக் கொடுக்கிறது. ரூபாய் எதுவும் கொடுக்கிறதில்லை.

23. எந்த விசேடங்களிலும், விசேடக்காரர்களின் பெண்பிள்ளைப் பிள்ளைகளுக்குமட்டும் சாமான்கள் கட்டி முடிந்து கொடுக்கிறது. வேறுயாருக்கும் கொடுக்கிறதில்லை.

24. எல்லா விசேடங்களிலும் பூச்செண்டு, பூச்சரம், எலுமிச்சம்பழம், சந்தனம், பன்னீர், தாம்பூலம் வழங்குவதுடன், பழங்களும், பிஸ்கோத்து, மிட்டாய், சர்பத்து, கலர் இவை வழங்குகிறது. இளநீர், டவல்துண்டு முதலிய சில்லரைச் சாமான்கள், புள்ளிகளுக்குக் கொடுக்கிறதில்லை.

25. எந்த விசேடத்திலும், சாதாரண நாட்களிலும் சம்பந்தப்புறத்திற்கும், மற்ற சுற்றத்தார்களுக்கும் காய்கறி, பழம், தேங்காய் கொடுத்து வாங்கிக் கொள்கிறது; ரூபாய் கொடுத்து வாங்கிக் கொள்கிறதில்லை.

26. சடங்குகாரர், மாமக்காரர், சம்பந்தப்புறம் பட்டைக்குக் கொடுக்கிற விசேடங்களில் திருப்பிவாங்காது ரூ. 4 க்குள் பட்டைக்குக் கொடுக்கிறது. எந்த விசேடத்திலும் மாமக்காரர் சடங்குகாரருக்கு ஒரு கொட்டானில், இரண்டு படி பாக்கும், பழங்களும் கொடுக்கிறது.

27. மகேசுவரபூசைக்குச் சம்பந்தப்புறம் அரிசி படி 21ம், காய்கறியும் கொடுக்கிறது. மற்ற பங்காளிகள், சுற்றத்தார்கள் அரிசி படி 3ம், ரூ. $\frac{1}{4}$-ம் கொடுக்கிறது; அல்லது ரூ. 1 கொடுக்கிறது. சம்பந்தப்புறத்திற்குக் கொட்டானில் பாக்கு படி 2ம், தேங்காய் மூடி பழம் (காளாஞ்சி), காய்கறியும் கொடுக்கிறது. மற்றும் கூடியிருப்பவர்களுக்குக் கொட்டா

னில் அரை ($\frac{1}{2}$) படி பாக்கும், காளாஞ்சியும் கொடுக்கிறது. ஷை பூசைக்கு மறுநாள் பகல் சாப்பாட்டுடன் ஊர்களுக்குப் போய்வருகிறது.

28. முதல் வருட ஆடி, கார்த்திகை, தீபாவளிக்கும், மற்ற எந்த முதல் வருட முறைகளுக்கும் மாப்பிள்ளைக்கு ரூ. $10\frac{1}{8}$ க்குள்ளும், பெண்ணுக்கு ரூ. $10\frac{1}{8}$ க்குள்ளும் பணம் பட்டை கொடுக்கிறது.

29. முதல் வருட தீபாவளிக்கு மாப்பிள்ளைக்கும், பெண்ணுக்கும் ரூ. 50-க்குள் வேட்டி சேலை வாங்கி மாப்பிள்ளை வீட்டுக்குக்கொடுத்தனுப்புகிறது. அதுபோல்பெண் தாய் வீட்டுக்குக் கூட்டி வந்து ரூ. 50-க்குள் வேட்டி, சேலை வாங்கிக் கொடுக்கிறது. சம்பந்தப்புறத்திற்கு முதல் வருட தீபாவளிக்கு வேட்டி, சேலை, துண்டு வகையரா ஒன்றும் கொடுத்து அனுப்புகிறதில்லை.

30. எந்த விசேடத்திலும் தாம்பூலம், பொட்டு சப்ளைக்காரனை வரவழைக்கிறதில்லை. நம்மவர்கள் உபசரணை செய்கிறது. ஐஸ்கிரீம், கூல்டிரிங் முதலியன சப்ளைக்காரனைக்கொண்டோ வீட்டிலோ செய்து கொடுக்கிறதில்லை. கதை, கச்சேரி, சதுர்கச்சேரி முதலியன சாந்தி, சதாபிஷேகம் இவற்றிற்குமட்டும் வைக்கிறது; மற்ற விசேடங்களில் வைக்கிறதில்லை.

31. கலியாணம், புதுமை, தீர்த்தம் குடித்தல், வேவு முதலிய சகல விசேடங்களிலும் பலகாரங்கள் செய்து பங்காளி வீடுகளுக்கும், மற்றவர்களுக்கும் பலகாரம், பழம், தேங்காய் கொடுக்கிறதுமில்லை; அதற்காக ரூபாய் கொடுக்கிறதுமில்லை; அயலூர்களுக்கு அனுப்புகிறதுமில்லை.

32. வீட்டிலுள்ள வேலைக்காரர்கள் உள்ளூரில் எந்த விசேடங்களிலும் சாப்பிடப் போகிறதில்லை.

33. பேரன், பேத்திகளைக் கலியாணமானவுடன் கூட்டிவந்து காய்ச்சி ஊத்துவதற்கு இரண்டு பேருக்கும் (மாப்பிள்ளை, பெண்) பணம்பட்டை, வேட்டி சேலைக்கு மொத்தம் ரூ. 101-க்குள் கொடுக்கிறது.

34. திருவிழாவில் தேங்காய் பழம் கோடுத்தல் :—தேங்காய் 21ம், வாழைப்பழம் 51ம், பாக்கு படி 4ம், வெற்றிலைக் கட்டு 2ம், மஞ்சள் வீசை 1-ம், எலுமிச்சம்பழம், புஷ்பம், சந்தனம், குங்குமம், இரண்டு வகைப் பழங்கள் வகைக்கு 21ம், பெண்ணுக்கு ரூபா 21க்குள்ளும், மாப்பிள்ளைக்கு ரூபா 21க்குள்ளும் முதல் வருடத்திற்கு மட்டும் கொடுக்கிறது. மற்ற பந்துக்கள் ரூபாய் கொடுக்கிறதில்லை. சம்பந்தப்புறத்திற்குக் கொட்டானில் பாக்கு பட்டணம் படி 2 கொடுக்கிறது. வருகிறவர்களுக்குச் சந்தனம், புஷ்பம், சர்பத், பழம் வகையரா வழங்குகிறது. மற்றபடி பாக்கோ, வேறு எவ்வித சாமான்களுமோ கொடுக்கிறதில்லை.

35. பிள்ளைப் பேறு, இருதுவான பேறு சொல்ல வருகிற வண்ணானுக்கு, அல்லது ஆளுக்கு ரூபா 3-க்குள் வேட்டியாகவாவது, ரொக்கமாகவாவது கொடுப்பதுடன் பாக்கு படி ½ யும் பலகாரமும் கொடுக்கிறது. வேறு எவ்விதமான சாமான்களும் கொடுக்கிறதில்லை. சம்பந்தப் புறத்திற்குப் பலகாரம் கொடுத்தனுப்புகிறதில்லை.

36. அறுபதாவது ஆண்டு சாந்திக்கும், சதாபிஷேகத்திற்கும் ஒரு ரூபாய் பணம் எழுதுகிறது. சட்டி கொடுக்கிறதில்லை. மற்றவைகளை சௌகர்யம்போல் செய்து கொள்கிறது.

37. விசேடங்களுக்கு வருகிற சிநேகிதர்களிடம் ரூபா 1 பணமெழுதிக்கொண்டு பெட்டியில் பாக்கு பட்டணம்படி 1ம், வெற்றிலைக்கட்டு 1ம், தேங்காய் 1ம், வாழைப் பழம் 10ம், மற்ற இருவகைப் பழங்களில் வகைக்கு ஒன்றும் வைத்துக் கொடுக்கிறது.

38. சம்பந்தப்புறத்திற்கு மாப்பிள்ளை பலகாரத்திற்காகப் பலகாரம் முதலியன செய்தனுப்புகிறதுமில்லை; அதற்காகப் பணம் கொடுக்கிறதுமில்லை.

39. அபர கிரியை:—அபர கிரியைக்குத் தாய்வீட்டார் நெல் ராமலிங்கம் மரக்கால் 6க்குள்ளும், நல்லெண்ணெய் படி 1ம், சியக்காய் வீசை 1ம், வெற்றிலைக் கட்டு இரண்டும், பாக்கு படி 1ம், வெல்லம் வீசை 1ம், புடவை 1ம், மஞ்சள் வீசை 1ம், புஷ்பம், சந்தனம், பன்னீரும், ரூ. 2க்குள்ளும் கொடுக்கிறது. ஷை கிரியைக்கு வருகிற ஆண், பெண்களை வெற்றிலை பாக்கு எடுத்துக்கொள்ளச் செய்கிறது. கையால் எடுத்துக் கொடுக்கிறதில்லை. எவருக்கும் பணம், பெட்டி, சட்டி, காய்கறி, பழம் ரூபாய் ஏதுவும் கொடுக்கிறதில்லை. பாயசம், வர்க்கான்னம் எதுவும் செய்கிறதில்லை. பங்காளிகள் கிரியையில் மூன்று நாட்களுக்குச் சாப்பிடுவதுடன் கல்லெடுப்பு அன்று தினமும் ஒரு வேளை சாப்பிடுகிறது. துக்கம் விசாரிக்க வருகிற பெண்களுக்கு "வைய சோறு" என்றும் "கிளைச் சோறு" என்றும் தனித்தனி இரண்டு வேளை சாப்பாடு இல்லை. ஒரு வேளை தான் சாப்பிடச் செய்கிறது. கிரியைக்குக் கூடுகிறவர்கள் புள்ளி ஒன்றுக்கு ரூ $\frac{1}{2}$ கொடுக்கிறது. பட்டத் துண்டு கொடுக்கவேண்டியவர்களுக்கு; துண்டு வாங்கிக்கொடுக்கிறது. அல்லது ரூபாய் அரை (ரூ. $\frac{1}{2}$) கொடுக்கிறது. சம்பந்தப்புறம் ரூ. 11க்குள் கொடுக்கிறது. அதில் பாதி திருப்

பிக் கொடுக்கிறது. சபிண்டிக்கும், தலை திதிக்கும் பங்காளிகள் ஒரு வேளைப் பலகாரமும், ஒரு வேளைச் சாப்பாடும் சாப்பிடுகிறது. வந்தவர்களுக்கும் ஊர் நகரத்தார்களுக்கும் கொட்டான் பாக்கு வகையராக் கொடுக்கிறதில்லை. துக்கம் விசாரிக்க வரும் உள்ளூர் நகரத்தாரைச் சாப்பாட்டுக்கு வரும்படி கிரியை வீட்டில் (அந்தச் சந்தர்ப்பத்தில்) அழைக்கிறது. அப்பால் வேலையாளைக்கொண்டு சாப்பாட்டுக்கு அழைக்கிறது. சாப்பிட வராதவர்களுக்கு அரிசி காய்கறி எதுவும் கொடுத்தனுப்புகிறதில்லை. மேற்கண்ட நன்மை தீமை எல்லா விசேடங்களிலும் ஆண் பெண் இருபாலருக்கும் வேட்டி புடவைகள் கட்டிக்கொள்ளக் கொடுக்கிறதில்லை.

40. நமது வட்டகையைத் தவிர வேறு வட்டகையில் சம்பந்தம் செய்துகொண்டால் ஷை வட்டகைத் தோதை அநுசரித்துச் செய்துகொள்ளுகிறது.

41. மேற்கண்ட தீர்மானங்களை ஈசுவரஷு வைகாசிமீ முதல் தேதி முதல் அமுலுக்குக் கொண்டுவருகிறது.

42. மேற்கண்ட தீர்மானங்களை நமது சமூகத்தார் வழுவாது அநுசரித்து நடந்து வரும்படி கவனிக்கவும், மற்றும் நம் சமூக நலன்களைக் கவனிக்கவும் கீழ்க்கண்ட 71 பேர்கள் அடங்கிய கமிட்டியொன்றை "தெற்கு வட்டகை நகரத்தார்கள் சங்கம்" என்ற பெயருடன் நியமிக்கிறது. ஷை சங்கம் மேற்கண்ட தீர்மானங்களைச் சமூகத்தார் சரிவர அநுஷ்டிக்கிறார்களாவெனக் கவனித்து வரும். யாரும் ஷை தீர்மானங்களிலிருந்து மீறி நடந்தால், அச்சங்கத்தைச் சேர்ந்த அந்த ஊரிலுள்ள அங்கத்தினர் அவ்விதம் மீறி நடப்பவர்களைத் தீர்மானப்படி நடக்குமாறு முயற்சி செய்

வார்கள். ஷ்டி நபர் ஒத்துவராவிட்டால் அந்த ஊர் மெம்பர்கள் முயற்சியில் அந்தந்த ஊர் நகரத்தார் கூடி விதாயம் செய்வார்கள். அதிலும் ஷ்டி நபர் ஒத்துவராவிட்டால் ஷ்டி சங்கக் காரியதரிசிக்கு அறிவித்துச் சங்கக்கூட்டம் கூடி அவர்கள் செய்யும் முடிவை ஏற்றுக்கொள்ளுகிறது. சங்கக்கூட்டங்களைக் கூட்டவேண்டியதும், அதன் சம்பந்தமான மற்ற எல்லா வேலைகளையும் தலைவரும், காரியதரிசியும் கவனிப்பார்கள். ஷ்டி தீர்மான சம்பந்தமான விஷயங்களைக் காரியதரிசியிடம் தெரிந்துகொள்ளலாம். கடிதப் போக்குவரத்துகளும் காரியதரிசிக்கே வைத்துக்கொள்ளவேண்டும். அவசியமானபோது ஷ்டி சங்கத்தார் வட்டகைக் கூட்டத்தைக் கூட்டி வைப்பார்கள். இது சம்பந்தமான செலவுகளைக் காரியதரிசி பொக்கிஷதாரரிடம் வாங்கிக்கொள்ளுகிறது. வரவு, செலவு கணக்குகளும் காரியதரிசி வைத்துக்கொள்கிறது. ஷ்டி சங்கமெம்பர்களில் யாராவது விலக நேர்ந்தால், பிரதிமெம்பரை அவ்வூர் நகரத்தார் தேர்ந்தெடுத்துக் காரியதரிசிக்கு அறிவிக்கவேண்டும். ஷ்டி சங்கக் கூட்டம் குறைந்தது 20 மெம்பர்கள் (தலைவர் பொக்கிஷதார் காரியதரிசி உள்பட) கூடி சாதாரண விஷயங்களைத் தீர்மானிக்கலாம். முக்கியமான விஷயங்களுக்குக் குறைந்தது 45 மெம்பர்கள் (தலைவர், பொக்கிஷதார், காரியதரிசி உள்பட) கூடி முடிவு செய்யவேண்டும். நம் வட்டகையைச்சேர்ந்த நகரத்தார்கள் அனைவரும் இச்சங்கத்திற்கு அங்கத்தினர்கள் ஆகையால் எல்லா ஊர்களிலும் புள்ளி ஒன்றுக்கு ரூ. $\frac{1}{2}$ வீதம் அந்தந்த ஊர் மெம்பர்கள் வசூல் செய்து ஈசுவரஹு வைகாசிமீ 30உக்குள் ஷ்டி சங்கக் காரியதரிசிக்கு அனுப்பி வைக்கவேண்டியது. காரியதரிசி சங்கத்தாரிடம் கணக்குகளை ஒப்புவிக்கவேண்டும்.

தெற்கு வட்டகை நகரத்தார்கள் சங்கம்

தலைவர்

1. திருவாளர் அரு. சேவு. சேவுகன் செட்டியார் அவர்கள் (நாட்டரசன்கோட்டை)

போக்கிஷதார்

2. ,, சி. கரு. சி. கரு. ஆதப்ப செட்டியாரவர்கள் (ஒக்கூர்)

காரியதரிசி

3. ,, வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியாரவர்கள் (பாகனேரி)

கமிட்டி மெம்பர்கள்

4. ,, சேவு. சித. ஆவிச்சி செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)

5. ,, வெ. க. லெ. லெட்சுமணன் செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)

6. ,, கண. மெ. நா. நாராயணன் செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)

7. ,, வெ. கண. வெ. கண்ணப்ப செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)

8. ,, பெரி. அரு. கண்ணப்ப செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)

9. திருவாளர் ஆ. வி. கண. செ. அடைக்கப்ப செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)
10. „ கண. ராம. சீனிவாசகம் செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)
11. „ முத்து. க. ஆவி. சேவு. ராமநாதன் செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)
12. „ கண. க. சொ. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)
13. „ பெரி. கண. லெட்சுமணன் செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)
14. „ அ. அரு. அடைக்கப்ப செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)
15. „ சுப. மு. முத்தையா செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)
16. „ ராம. உ. உ. சிதம்பரம் செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)
17. „ கண. குப. கண்ணப்ப செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)
18. „ கண. சுப. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)
19. „ குப. அ. கரு. ராம. ராமநாதம் செட்டியாரவர்கள் (நாட்டரசன் கோட்டை)
20. „ மு. நா. முத்து. முத்துராமன் செட்டியாரவர்கள் (பாகனேரி)
21. „ சுப. சொ. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் (பாகனேரி)
22. „ ராம. அ. அ. சிவ. சிவராமன் செட்டியாரவர்கள் (பாகனேரி)

23. திருவாளர் சுப. வெ. ராம. ராமநாதன் செட்டியாரவர்கள் (பாகனேரி)
24. ,, கா. நா. உ. வி. வினைதீர்த்தான் செட்டியாரவர்கள் (பாகனேரி)
25. ,, பெரி. அழ. மு. முத்துக்கருப்பஞ்செட்டியாரவர்கள் (பாகனேரி)
26. ,, ஆரு. செ. செட்டியப்ப செட்டியாரவர்கள் (பாகனேரி)
27. ,, கா. உல..முத்தையா செட்டியாரவர்கள் (பாகனேரி)
28. ,, ராம. சுப. லெ. லெட்சுமணன் செட்டியாரவர்கள் (பாகனேரி)
29. ,, அரு. கரு.வே. வேலாயுதம் செட்டியாரவர்கள் (பாகனேரி)
30. ,, ஆத. உல. கண்ணப்பசெட்டியாரவர்கள் (பாகனேரி)
31. ,, வெ. வெ. கரு. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் (பாகனேரி)
32. ,, சி. அரு. சின்னன் செட்டியாரவர்கள் (அலவாக்கோட்டை)
33. ,, பி. நா. பி. ராமநாதன் செட்டியாரவர்கள் (அலவாக்கோட்டை)
34. ,, பி. நா. சிவ. லெ. நாராயணன் செட்டியாரவர்கள் (அலவாக்கோட்டை)
35. ,, சுப. சித. ராம. ராமநாதன் செட்டியாரவர்கள் (அலவாக்கோட்டை)
36. ,, அண. சித. சிதம்பரம் செட்டியாரவர்கள் (அலவாக்கோட்டை)
37. ,, நல. ராம. ப. பஞ்சாட்சரம் செட்டியாரவர்கள் (அலவாக்கோட்டை)

38. திருவாளர் சுப. கண. சுப. முத்துராமன் செட்டியாரவர்கள்
(சொக்கலிங்கபுரம்)

39. ,, அரு. சுப. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள்
(சொக்கலிங்கபுரம்)

40. ,, குப. அண. அண்ணாமலை செட்டியாரவர்கள்
(சொக்கலிங்கபுரம்)

41. ,, கும. சுப. சு. முத்துராமன் செட்டியாரவர்கள்
(கீழப்பூங்குடி)

42. ,, நா. லெ. அரு. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள்
(கீழப்பூங்குடி)

43. ,, கூ. அரு. க. வயிரவன் செட்டியாரவர்கள்
(கீழப்பூங்குடி)

44. ,, கூ. கண. க. கூராண்டான் செட்டியாரவர்கள்
(கீழப்பூங்குடி)

45. ,, கூ. கரு. நா. சித. கண்ணப்ப செட்டியாரவர்ாள்
(கீழப்பூங்குடி)

46. ,, சி. கரு. சி. ராம. சிந்தாமணி செட்டியாரவர்கள்
(ஒக்கூர்)

47. ,, சி. கரு. ஆ. அரு. காசிச்செட்டியாரவர்கள்
(ஒக்கூர்)

48. ,, சி. க. அரு. சித. அருணாசலம் செட்டியாரவர்கள்
(ஒக்கூர்)

49. ,, வீர. ராம. நா. ராமநாதன் செட்டியாரவர்கள்
(ஒக்கூர்)

50. ,, செ. கண. செ. சேக்கப்ப செட்டியாரவர்கள்
(ஒக்கூர்)

51. ,, நா. மு. நாராயணன் செட்டியாரவர்கள்
(சொக்கநாதபுரம்)

52. திருவாளர் சுப. க. தி. கதிரேசன் செட்டியாரவர்கள் (சொக்கநாதபுரம்)

53. ,, சுப. க. அ. நாராயணன் செட்டியாரவர்கள் (சோழபுரம்)

54. ,, சுப. கும. சே. சேதுராமன் செட்டியாரவர்கள் (சோழபுரம்)

55. ,, உ. ல. க. கண. கயி. கண்ணப்ப செட்டியாரவர்கள் (சக்கந்தி)

56. ,, உல. க. க. நா. நாராயணன் செட்டியாரவர்கள் (சக்கந்தி)

57. ,, உ. ல. வ. வ. முத்தையா செட்டியாரவர்கள் (காளையார்மங்கலம்)

58. ,, சுப. நா. நடராஜன் செட்டியாரவர்கள் (காளையார்மங்கலம்)

59. ,, சாத. சிவ. சிவராமன் செட்டியாரவர்கள் (நடராஜபுரம்)

60. ,, உ. ராம. ராமநாதன் செட்டியாரவர்கள் (நடராஜபுரம்)

61. ,, சி. குழ. சிந்தாமணி செட்டியாரவர்கள் (பனங்குடி)

62. ,, அரு. மு. அரு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் (வெற்றியூர்)

63. ,, ஆதி. அரு. அருணாசலம் செட்டியாரவர்கள் (வெற்றியூர்)

64. ,, தெ. கரு. அ. முத்தையா செட்டியாரவர்கள் (அழகாபுரி)

65. ,, உ. நா. ராம. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள் (அழகாபுரி)

66. திருவாளர் திரு. நா. அண்ணாமலை செட்டியாரவர்கள்
(அ. சிறுவயல்)

67. ,, பெரி. வெ. சோமசுந்தரம் செட்டியாரவர்கள்
(அ. சிறுவயல்)

68. ,, அழ. வெ. அழ. அழகப்ப செட்டியாரவர்கள்
(அ. சிறுவயல்)

69. ,, அழ. மெ. சு. முத்தையா செட்டியாரவர்கள்
(பட்டமங்கலம்)

70. ,, பெரி. சுப. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள்
(பட்டமங்கலம்)

71. ,, சேவு. நா. நாராயணன் செட்டியாரவர்கள்
(கருங்குளம்)

ஒன்பது கோவில்களும், பிரிவுகளும்

விவரம்.

இளையாற்றக்குடிக்கோவில்.

சுவாமிபெயர்............கைலாசநாதர்.

அம்மைபெயர்...........நித்தியகல்யாணி

பிரிவுகள்.

(க) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில்,
ஒக்கூருடையார்.

(உ) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில், அரும்பாற்கிளையாரான.
பட்டணசாமியார்.

(ங) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில்,
பெருமருதூருடையார்.

(ச) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில்,
கழனிவாசக்குடியார்.

(ரு) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான.
குலசேகரபுரத்தில்,
கிங்கிணிக்கூருடையார்.

(சூ) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான
குலசேகரபுரத்தில்,
பேரசெந்தூருடையார்.

(எ) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில்,
சிறுசேத்தூருடையார்.

மாற்றூர்க்கோவில்.

சுவாமிபெயர்.........ஐந்நூற்றீசர்.
அம்மைபெயர்.........பெரியநாயகி.

பிரிவுகள்.

(க) சேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில்,
மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்,
உறையூருடையார்.

(உ) சேரளசிங்கவடநாடாகிய பிரம்பூர்நாட்டில்,
மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்,
அரும்பாக்கூருடையார்.

(ந) சேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில்,
மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்,
மணலூருடையார்.

(ச) சேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில்,
மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்,
மண்ணூருடையார்.

(ரு) சேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில்,
மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்,
கண்ணூருடையார்.

(சு) சேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில்,
மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்,
கருப்பூருடையார்.

(எ) கேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில்,
மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்,
குளத்தூருடையார்.

வைரவன்கோவில்.

சுவாமிபெயர்..........வளரொளிநாதர்.
அம்மைபெயர்.........வடிவுடையம்மை.

பிரிவுகள்.

(க) கேரளசிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்திருவான,
வீரபாண்டியபுரத்தில்,
சிறுகுளத்தூருடையார்.

இதில் உள்பிரிவுகள்.

(க) பெரிய வகுப்பு.
(உ) தெய்யனூர்வகுப்பு, (தெய்வநாயகர் வகுப்பு)
(ஈ) பிள்ளையார் வகுப்பு.

(உ) கேரளசிங்கவளநாடாகிய ஏழகப் பெருந்திருவான,
வீரபாண்டியபுரத்தில்,
கழனிவாசலுடையார்.

(ஈ) கேரளசிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்திருவான,
வீரபாண்டியபுரத்தில்,
மருதேந்திரபுரமுடையார்.

இரணியூர்க்கோவில்.

சுவாமிபெயர்........ஆட்கொண்டநாதர்.
அம்மைபெயர்.........சிவபுரத்தேவி.

(க) கல்வாசனாட்டில், இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில், இரணியூர்,
மருதங்குடியான இராசநாராயணபுரத்தில்,
இரணியூர்த்திருவேட்பூருடையார்.

பிள்ளையார்பட்டிக்கோவில்.

விநாயகர்பெயர் ....கற்பகவிநாயகர்.
சுவாமிபெயர் ....திருவீசர்.
அம்மைபெயர்............சிவகாமவல்லி.
சுவாமிபெயர் ....மருதீசர்.
அம்மைபெயர்..... ......வாடாமலர்மங்கை.

(க) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில், இரணியூர்,
மருதங்குடியான இராசநாராயணபுரத்தில்,
பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையார்.

நேமங்கோவில்.

சுவாமிபெயர்......செயங்கொண்டசோளேசர்.
அம்மைபெயர்.....சவுந்தரநாயகி.

(க) கேரளசிங்கவளநாட்டில் நேமமாகிய,
குலசேகரபுரத்தில், தேனாறுபாயும்,
இளநலமுடையார்.

இலுப்பைக்குடிக்கோவில்.

சுவாமிபெயர்........தான்றோன்றியீசர்.
அம்மைபெயர்........ சவுந்தரநாயகி.

(க) கேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில்,
இலுப்பைக்குடியான,

புகழிடங்கொடுத்த பட்டணத்தில்,
சூடாமணிபுரமுடையார்.

சூரைக்குடிக்கோவில்.

சுவாமிபெயர்.........தேசிகநாதர்.
அம்மைபெயர்..........ஆவுடைநாயகி.

(க) கேரளசிங்கவளநாட்டில் சூரைக்குடியான,
தேசிகநாராயணபுரத்தில்,
புகழ்வேண்டியபாக்கமுடையார்.

வேலங்குடிக்கோவில்.

சுவாமிபெயர்.........கண்டீசுவரர்.
அம்மைபெயர்.........காமாட்சியம்மை.

(க) கேரளசிங்கவளநாடாகிய பாலையூர்நாட்டில்,
வேலன்குடியான தேசிகநாராயணபுரத்தில்,
கழனிநல்லூருடையார்.

கலியாணத்தில், இசைகுடிமானம் எழுதுகிறவிதம்

ஷு மீ உ கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரத்தில் ஒக்கூருடையான் அருணாசலஞ்செட்டி கண்ணப்பரோ, கேரளசிங்கவள நாடாகிய பிரம்பூர்நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில் அரும்பாக்கூருடையான் சொக்கலிங்கஞ்செட்டி பழநியப்பரோ இவர் மகன் முருகப்பனுக்கு இவர்மகள் வள்ளியம்மையைப் பாணிக்கிரகணம் பண்ணிக்கொண்டமைக்கு இவர் பூஷணம்பூட்டும் பொன் ஒன்பது ஆறுகல்லெடை, பொன் பதின்முக்கழஞ்சு, இவர் சீதனம் கொடுக்கும்பொன்

இம்மாறு இவ்வெடை, பொன் ஆறுகழஞ்சு, வெள்ளி ஆறு கழஞ்சு, வெண்கலந்தராப்பலம் ஆறுபத்தொன்று, வெள்ளாட்டிக்குப்பணம் முப்பது, சீராட்டுச்சக்காம் ஆறுபத்தொன்று, இவ்வகைப்படி செய்வோம். இவர் நன்கொடை கொடுக்கும்பொன் ஐம்பது, மோதிரம் விராகனெடை மூன்று, இவர் உகந்துடைமையாய்க் கொடுக்கும் பொன் வளையி எழுகழஞ்சு, இவ்வகைப்படி செய்வோம். இந்த நாள் இவரிடும்பொன் இவர் சொற்படி தெரிசனை பதின் முக்கழஞ்சு, இவ்வகைப்படி செய்வோம். இந்த இசைகுடிமானம் எழுதினேன் கல்வாசனுட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரத்தில் ஒக்கூருடையான்.................. ....செட்டி கையெழுத்து.

முற்றிற்று.

வாழ்த்து விருத்தம்.

உலகெலாம் வாழி வாழி யொன்பது நகரக் கோவில்
வலமுள பரம னம்மை மரகத விநாயகன் சீர்
நலமிகு முருகன் வாழி நாளுஞ் சந்தானம் பல்கி
மலர்மக ளருள்பெற் றேழு வழி நகரத்தார் வாழி.

திருச்சிற்றம்பலம்.
